# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2446 - 2025 ජූලි මස 18 වැනි සිකුරාදා - 2025.07.18

2446 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 4 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 7 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, ஓகத்து மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, யூலை மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோறாள**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1 - B 82701- 403 (2025/07)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி (சிங்களம்) – புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய மேலதிக முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. உரிய பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு பாடம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு பாடமாக கருதப்படல் வேண்டும். அந்த பாடப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அந்தப் பாடம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவுக்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு I” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர், (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, ஓகத்து மாதம் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல.234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, யூலை 01.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| புத்தளம் | நாத்தாண்டிய | பிடிகல் கோறளை தெற்கு பிரிவின் கொட்டாரமுல்ல பிரதேசத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |
| புத்தளம் | முந்தலம | புத்தளம் பத்து பிரிவின் பெருக்கு வட்டான் பிரதேசத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |
| புத்தளம் | சிலாபம் | பிடிகல் கோறளை வடக்கு பிரிவின் சிலாபம் நகர பிரதேசத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |
| புத்தளம் | புத்தளம் | புத்தளம் ஏழுகோறளை பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |

07-622

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி (தமிழ்) – மட்டக்களப்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய மேலதிக முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. உரிய பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு பாடம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு பாடமாக கருதப்படல் வேண்டும். அந்த பாடப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அந்தப் பாடம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவுக்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு I” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர், (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, ஓகத்து மாதம் 20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல.234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, யூலை 01.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| மட்டகளப்பு | ஏறாவூர் நகரம் | ஏறாவூர் கோறளைப்பற்று பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மட்டகளப்பு |
| மட்டகளப்பு | காத்தான்குடி | காத்தான்குடி தெற்கு பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மட்டகளப்பு |
| மட்டகளப்பு | காத்தான்குடி | காத்தான்குடி மத்தி பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மட்டகளப்பு |
| மட்டகளப்பு | மண்முனை வடக்கு | பூநொச்சிமுனை பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மட்டகளப்பு |

**அட்டவணை *(தொடர்ச்சி)***

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| மட்டகளப்பு | மண்முனை வடக்கு | கோட்டமுனை பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மட்டகளப்பு |
| மட்டகளப்பு | கோறளைபற்று வடக்கு | ரிதிதென்னை பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மட்டகளப்பு |

07-730

---

## பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர் ஒருவரை நியமித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 54 ஆம் உறுப்புரையின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள தகைமையீனங்களுக்குட்பட்டு பகிரங்க சேவை ஆணைக்குழுவில் உறுப்பினர் ஒருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆர்வம் காட்டும் தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

www.parliament.lk எனும் இலங்கைப் பாராளுமன்ற இணையத்தளத்தில் "பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர் ஒருவரை நியமித்தல் (ப.சே.ஆ.)" என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் :

அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

எனும் முகவரிக்கு, 2025, ஓகத்து 01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக "பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர் ஒருவரை நியமித்தல்" எனக் குறிப்பிடவும்.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பேரில் வெளியிடப்பட்டது.

அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம்,
அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்,
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.
2025.07.17.

07-804

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

### மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு – 2025

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மாணவ தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து 2025.07.18 ஆம் திகதி முதல் 2025.08.12 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

**1. கவனிக்க வேண்டியவை:**

1.1. ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும். 2020, 2021 மற்றும் 2022 ஆகிய வருடங்களில் க.பொ.த (உ.தர) பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் ஒரு விண்ணப்பம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். அத்தகைய விண்ணப்பதாரர்கள் தமது விருப்பத்திற்கு அமைய தேர்ந்தெடுக்கப்பட்ட வருடத்திற்காக மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். எல்லா வருடங்களுக்காகவும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கக்கூடாது. அவ்வாறின்றி பல வருடங்களிலும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் அனைத்து விண்ணப்பங் களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும்.

1.2. கடந்த பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்பு தொடர்பாக அவதானம் செலுத்தும் போது, ஒரு மாணவர் அரசாங்கத்தின் இலவசக் கல்விச் சலுகையின் கீழ் பல்வேறு அரச நிறுவனங்களினால் நடாத்தப்படும் கற்கை நெறிகள் பலவற்றில் இணைவதால், தகுதியுடைய பல மாணவர்களுக்கு இதுபோன்ற ஒரு வாய்ப்புக்கூட கிடைக்காமல் இருப்பது அவதானிக்கப்பட்டது. இது தவிர இந்த நிலை காரணமாக அரசாங்கத்தின் பணம் வீண் விரையமாகி வருவதுடன், பாடநெறியின் இறுதியில் எதிர்பார்த்த எண்ணிக்கையில் பயிற்றுவிக்கப்பட்ட தொழில்வல்லுனர்களின் எண்ணிக்கை இல்லாத காரணத்தால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் திட்டமிட்ட இலக்குகளை அடைய முடியாதுள்ளது. எனவே, மேற்படி நிலைமையைக் குறைப்பதற்கு ஒவ்வொரு விண்ணப்பதாரர்களுக்கும் ஒரு சந்தர்ப்பத்தையாவது வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் இந்த வர்த்தமானி அறிவித்தலின் பந்தி இலக்கம் 5 இல் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, இலக்கம் 5.1 முதல் 5.5 வரையிலான துணைப் பந்திகளில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகுதியற்ற ஒருவர் இதற்காக விண்ணப்பித்தல் கூடாது. எவ்வாறாயினும், அத்தகைய தகுதியற்றவர்கள் இதற்கு விண்ணப்பித்து, பின்னர் கண்டறியப்பட்டால், வர்த்தமானி அறிவித்தலின் துணைப் பந்தி 9.3 இன்படி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

1.3. கடந்த ஆட்சேர்ப்புகளில், உண்மைக்குப் புறம்பான தகவல்கள் (தவறான பரீட்சை ஆண்டுகள், பாடங்கள், பெறப்பட்ட மதிப்பெண்கள் போன்றவை) உள்ளிட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன், சில விண்ணப்பதாரர்கள் பொய்யான தகவல்களை உள்ளிட்டு தயாரிக்கப்பட்ட சான்றிதழ்கள் நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கப்பட்டமையும் அவதானிக்க முடிந்தது. இது ஒரு பாரிய தவறாகும். எனவே, எந்தவொரு விண்ணப்பதாரரும் தாம் சமர்ப்பிக்கும் இணையவழி விண்ணப்பத்தில் தவறான தகவல்களை உள்ளிடக்கூடாது. தவறான தகவல்களை உள்ளிட்டு சமர்ப்பிக்கப்படும் அனைத்து விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் என்பதுடன், அரசாங்க சேவைக்கு இணைய முடியாதவர்களின் கருப்புப் பட்டியலில் அவர்களின் பெயர்கள் சேர்க்கப்படும்.

1.4. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் முதலில் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இணையவழி விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்றாக படித்துப் புரிந்து கொண்டு, இந்த கற்கைநெறிக்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தகுதியானவரா என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பின்னர் வர்த்தமானி அறிவித்தலின் 6.3 பந்தியின்படி, எந்தவொரு இலங்கை வங்கிக்கிளையில் 1000.00 பணத்தை செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீற்று, 8.2.(இ), 8.2.(ஈ) மற்றும் 8.2.(உ) ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தயார்செய்து விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான செயல்முறையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும்.

02. **கற்கை நெறிக்கான கல்வி ஏனைய தகைமைகள் :**

| *க.பொ.த.(சா.தர) தகைமை* | *க.பொ.த. (உ.தர) தகைமை* | *பயிற்சிக்கான பிற தகைமைகள் மற்றும் விஷேட விடயங்கள்* |
|---|---|---|
| சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய 04 பாடங்களில் திறமை சித்தியுடன் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் க.பொ.த (சாதாரண) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல். | 2020 ஆம் ஆண்டில் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டில் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2021 அல்லது 2022 ஆம் ஆண்டில் ஏதாவதொரு ஆண்டில் கல்விப் பொது தராதர (உயர் தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான பிரிவிற்குரிய உயிரியல், இரசாயனவியல், விவசாயவியல், பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல். (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த)<br><br>அல்லது<br><br>2020 ஆம் ஆண்டில் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டில் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2021 அல்லது 2022 ஆம் ஆண்டில் ஏதாவதொரு ஆண்டில் கல்விப் பொது தராதர (உ.தர) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானப் பிரிவிற்குரிய இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் உயர் கணிதம் ஆகிய பாடங்களில் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) | முழு நேர கற்கை நெறியான இதன் காலம் 03 வருடங்கள் ஆகும்.<br><br>கற்கை நெறியை ஆங்கிலத்தில் தொடர்தல் வேண்டும்.<br><br>2025.08.12 ஆம் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 28 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.<br><br>உயரம் 04 அடி 10 அங்குலத்திற்கு (147.3 cm) குறையாதிருத்தல்.<br><br>திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.<br><br>ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும் |

அட்டவணை இலக்கம் 01

03. கற்கை நெறிக்கு தெரிவு செய்யும் முறை :

3.1. மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பதற்கான 2013.11.19 ஆம் திகதிய 1837/8 எனும் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட இலங்கை தாதியர் சேவைக்கான சேவை பிரமாணக்குறிப்பு மற்றும் அதனுடன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைய தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து மாணவர் தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். (ஆண் விண்ணப்பதாரிகளின் ஆட்சேர்ப்பானது, தாதியர் சேவை பிரமாணக்குறிப்பின் விதிமுறைகளின் கீழ் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.)

3.2. நாடளாவிய ரீதியில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திலும் சனத்தொகையின் அடிப்படையில், சனத்தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்யவேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

3.3. அதன்பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை உரிய மாவட்டத்தில் இருந்து 2020 ஆம் ஆண்டின் (பழைய பாடத்திட்டம்) அல்லது 2020 ஆம் ஆண்டின் (புதிய பாடத்திட்டம்) அல்லது 2021 ஆம் ஆண்டின் அல்லது 2022 ஆம் ஆண்டின் அல்லது பரீட்சைகளில் ஒன்றில், அந்த ஒவ்வொரு பரீட்சையிலும் விண்ணப்பித்து தேவையான குறைந்தபட்ச கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மொத்த

விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு உரிய மாவட்டத்திலும் இருந்து அந்த ஒவ்வொரு பரீட்சையிலும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

3.4. அதன்பின்னர் அந்த ஒவ்வொரு பரீட்சைகளில் இருந்தும் ஆட்சேர்ப்பு செய்யவேண்டிய எண்ணிக்கை அந்த பரீட்சையில் உயிரியல் மற்றும் பௌதீக விஞ்ஞானம் பாடத்துறையின் கீழ் இந்த கற்கைநெறிக்கு விண்ணப்பித்த குறைந்த கல்வித்தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மொத்த விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஒவ்வொரு பரீட்சையிலும் ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

3.5. அவ்வாறு ஒவ்வொரு பரீட்சைகளில் இருந்தும் ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்பட்டு அந்த எண்ணிக்கையில் 5% ஆண் விண்ணப்பதாரிகளையும், 95% பெண் விண்ணப்பதாரிகளையும் உள்ளடக்கியதாக ஒவ்வொரு பரீட்சைகளில் இருந்தும் ஒவ்வொரு பாடத்துறையின் கீழ் மாவட்டத்தின் அதிகூடிய Z மதிப்பெண்களைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் கற்கை நெறிக்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

04. **தகுதிகள் :**

அனைத்து விண்ணப்பதாரர்களும் :

4.1. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.2. விண்ணப்பதாரர்கள் நன்நடத்தை உடையவராகவும், சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

4.3. தாம் விண்ணப்பிக்கும் மாவட்டம் வதிவிட மாவட்டமாகக் கருதப்படுவதற்கு, விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் திகதியான 2025.08.12 ஆம் திகதிக்கு கிட்டிய 03 வருடங்கள் தொடர்ந்து அந்த மாவட்டத்தில் வசித்திருக்க வேண்டும். அதனை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலர் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், தொடர்ந்து 03 வருடங்களாக வதிவிட காலத்தை நிரூபிக்க முடியாத விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் வதிவிட மாவட்டமாக அவர்கள் விண்ணப்பித்த மாவட்டத்தை வழங்க முடியாது என்பதுடன், அத்தகைய விண்ணப்பதார்களின் முந்தைய வதிவிட காலங்களை கருத்தில் கொண்டு, விண்ணப்பதாரர் அடுத்ததாக நீண்ட காலங்கள் வசித்த மாவட்டம் விண்ணப்பதாரருக்கான வதிவிட மாவட்டமாக நேர்முகப் பரீட்சை சபையினால் தீர்மானிக்கப்படும். இதற்குத் தேவையான ஆவணங்களை நேர்முக சபையிடம் விண்ணப்பதாரர்கள் உடனடியாக சமர்ப்பித்தல் வேண்டும்.

குறிப்பு :
விண்ணப்பதாரர் ஒருவரின் தகப்பன் அல்லது தாய் அரச, மாகாண அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் இடமாற்றம் பெறக்கூடிய சேவையிலுள்ள காரணத்தால் அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணங்களினால் கிட்டிய 03 வருட வதிவை அவரினால் உறுதி செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் அது தொடர்பான இறுதித்தீர்மானம் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும்.

05. கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதற்கு அல்லது இணைவதற்கு தகுதியற்றவர்கள் :

5.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நடாத்தப்படும் அரசாங்க பல்கலைக்கழகம்/அரசாங்க பல்கலைக்கழக கல்லூரியொன்றில் க.பொ.த (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் பட்டப் படிப்பைத் தொடர்வதற்காக "அரசாங்க இலவசக் கல்விச் சலுகைகள்" இன் கீழ், உள்ளக மாணவராகப் பதிவு செய்தவர்கள்/கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

5.2 தேசிய கல்வியல் கல்லூரியொன்றில் க.பொ.த (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்படும் கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/ கற்றுக்கொண்டிருப்பவர்கள்.

5.3 சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கீழ் அல்லது வேறு ஏதாவது அரச நிறுவனம் அல்லது க.பொ.த (உ.தர) தகைமைகளுடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட முழுநேர கற்கைக்காக பதிவு செய்தவர்கள்/கற்கையை தொடர்பவர்கள்.

5.4 மேலே 5.1, 5.2 மற்றும் 5.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் கற்கைக்காக பதிவு செய்துள்ள மாணவர்கள் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியான பிறகு, அவர்கள் தங்கள் பதிவை இரத்து செய்தாலும், அவர்கள் இதற்காக விண்ணப்பிக்க/இணைவதற்கு தகுதி பெற மாட்டார்கள். மேலும் வர்த்தமானி அறிவித்தல் வெளியான பிறகும்/ நேர்முகப்பரீட்சை நடாத்திய பிறகும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்குரிய கற்கைகளுக்கு பதிவு செய்து பின்னர் அந்த பதிவை இரத்து செய்தாலும், அவர்களும் கற்கை நெறியில் இணைவதற்கு தகுதி பெற மாட்டார்கள்.

5.5 திருமணம் பதிவு செய்த அல்லது விவாகரத்து செய்த நபர்கள்.

**06. விண்ணப்பிக்கும் முறை :**

6.1 மேற்படி பயிற்சி நெறிக்கு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். அதற்காக இந்த அமைச்சின் இணையத்தளத்தில் உரிய பகுதியில் உள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

6.2. விண்ணப்பம் ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்தி செய்தல் வேண்டும்.

6.3 விண்ணப்பதாரிகள் ரூபா 1000.00 பணத்தை இலங்கை வங்கி, தப்ரோபேன் கிளையின் இலக்கம் 7041318 எனும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரின் பரீட்சைக் கட்டணம் அறவிடல் கணக்கிற்கு செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முன் ஏதேனும் இலங்கை வங்கிக் கிளையில் இந்த தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்காக பெறப்பட்ட பற்றுச்சீட்டின் அச்சிடப்பட்ட இலக்கத்தை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் உள்ளிட்ட பிறகே தங்கள் விண்ணப்பத்தை இணையவழி ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். இப்பணத்தை பணம் வைப்புச் செய்யும் இயந்திரம் ஊடாக அல்லது இணைய வங்கி சேவை மூலம் செலுத்தக்கூடாது. இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் திருப்பித்தரப்படமாட்டாது என்பதுடன் பிரிதொரு பரீட்சையொன்றுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. நீங்கள் மேற்படி கட்டணம் செலுத்தியதற்கான ஆதாரத்தை (பற்றுச்சீற்று) பாதுகாப்பாக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் அதன் போது அதனை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும். அதன்படி, விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு பணம் செலுத்தப்பட்டமை கண்டறியப்பட்டால் அந்த விண்ணப்பதாரர்களும் பற்றுச்சீட்டை சமர்ப்பிக்கத் தவறிய விண்ணப்பதாரர்களும் ஆட்சேர்ப்புக்குத் தகுதியற்றவர்களாக கருதப்படுவார்கள்.

6.4. சமர்ப்பிக்கப்பட்ட இணையவழி விண்ணப்பத்தின் பிரதி மற்றும் 05 இலக்கக் குறியீட்டைப் பெறல்

(அ) இந்த வர்த்தமானி அறிவிப்பில் மற்றும் அதனுடன் இணைந்ததாக இணையவழி விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்கும் ஏற்ப விண்ணப்பத்தை வெற்றிகரமாகச் சமர்ப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் விண்ணப்பம் முறையாக அனுப்பிய உடனேயே அதன் பிரதி மற்றும் தனித்துவமான 05 இலக்க குறியீடு பெறப்படும்.

(ஆ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் கணினித் திரையில் தோன்றும் தமது விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியொன்றை (Print – out) எடுக்க வேண்டும். அதனை தபால் மூலம் அனுப்ப வேண்டிய அவசியமில்லை. விண்ணப்பத்தை சமர்ப்பித்த ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான் இதற்காக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதற்கான முறையான மற்றும் சரியான ஒரே ஆதாரமாக இருப்பதால் அதனை பாதுகாப்பாக வைத்திருப்பது உங்கள் பொறுப்பாகும். அதுமட்டுமன்றி, 05 இலக்கங்களைக் கொண்ட குறியீட்டையும் பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூலம் நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் பிரதியை பின்னர் பெறலாம்.

(இ) ஏதாவது சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் சமர்ப்பித்த பிறகு அதன் நகல் அல்லது 05 இலக்கங்களைக் கொண்ட குறியீடு கிடைக்காத விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்கள் முறையாக பதிவேற்றம் செய்யப்படவில்லை/சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அத்தகைய நபர்கள் அனைவரும் விண்ணப்பம் சமர்ப்பிக்காத மாணவர்களாகவே கருதப்படுவார்கள். அதன்படி, அத்தகைய விண்ணப்பதாரர்கள் உடனடியாக கீழே பந்தி 6.5 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி அல்லது / மற்றும் மின்னஞ்சல் ஊடாக மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவைத் தொடர்பு கொண்டு 2025.08.12 ஆம் திகதிக்கு முன் தமது விண்ணப்பம் தொடர்பான சிக்கல்களைத் தீர்த்து, தமக்குரிய குறியீடு மற்றும் விண்ணப்பத்தின் நகல்களைப் பெற ஏற்பாடு செய்தல் வேண்டும். இது விண்ணப்பதாரியின்

பொறுப்பாகும் என்பதை அவதானத்திற்கு உட்படுத்துகிறேன். எவ்வாறாயினும், இந்த அமைச்சிற்கு முறையாக அனுப்பப்படாத இணையவழி விண்ணப்பங்கள் தொடர்பாக 2025.08.12 ஆம் திகதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எவ்வித கோரிக்கைகளும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) மேலும், விண்ணப்பதாரர் ஒருவரினால் இந்த ஆட்சேர்ப்பு தொடர்பான எந்தவொரு விடயம் தொடர்பாகவும் செய்யப்படும் கோரிக்கைகள் தமது விண்ணப்பத்தின் பிரதியுடன் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கு மாறாக சமர்ப்பிக்கும் எந்தவொரு கோரிக்கையும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது என்பதை மேலும் அவதானத்திற்கு உட்படுத்துகிறேன்.

6.5 **அத்தியவசிய தகவல்களுக்காக விசாரித்தல் :**

(அ) இக்கற்கைக்கு விண்ணப்பிப்பதற்கான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதில் ஏதேனும் சிக்கல்கள் எழுந்தால் அது தொடர்பாக தொழில்நுட்ப உதவிகளுக்கு அல்லது மேலே பந்தி 6.4 (இ) இல் குறிப்பிடப்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மட்டும் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் 4.00 வரை சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவின் 0112 340 007 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். hrcodmoh@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம். (மின்னஞ்சல் ஊடாக தொடர்பு கொள்ளும்போது எப்போதும் உங்கள் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடுவது கட்டாயமாகும்.)

(ஆ) சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் மற்றும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் இணையத்தளத்தில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஏனைய விடயங்கள் தொடர்பாக விசாரிப்பதை தவிர்க்கவும்.

07. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

7.1. இலங்கை நிருவாக சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர் / இலங்கை கல்விச் சேவையிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் / இலங்கை கணக்காளர் சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவர் /அரச பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர் / சமாதான நீதவான் ஒருவர்/ சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்த சம்பளம் 512148.00 ரூபாவிற்கு குறையாத சம்பளம் பெறும் நிரந்தர ஓய்வூதியம் பெறும் அரச உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

7.2. இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு இணங்காத மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்காப்படும்.

08. **நேர்முகப்பரீட்சைக்கு நீங்கள் அழைக்கப்பட்டால் சமர்ப்பிக்க வேண்டிய விபரங்கள் :**

8.1 நீங்கள் வெற்றிகரமாக பதிவேற்றிய இணையத்தள விண்ணப்பங்களுக்கு அமைய குறைந்த கல்வித் தகைமையை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள் Z பெறுமதிக்கு அமைய தயாரிக்கப்பட்ட முதன்மை பட்டியலொன்றை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் இந்த பதவிக்குரித்தான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் மற்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கீழ் தகைமைகள் மற்றும் உடற்தகைமை என்பன பரிசீலிக்கப்படும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்கள்; பின்வரும் 8.2. (அ) தொடக்கம் 8.2 (ஒ) வரையான துணை பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

8.2 தவிர்க்க முடியாத காரணத்தினால் (நேர்முக சபையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய) விண்ணப்பதாரர் ஒருவருக்கு ஏதாவது சான்றிதழ்கள்/ஆவணங்களை அன்றைய தினத்தில் சமர்ப்பிக்க முடியாதவிடத்து நேர்முகப்பரீட்சை சபையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய அந்த சான்றிதழ்கள்/ஆவணங்களை நேர்முகப்பரீட்சை நடைபெற்ற தினத்திலிருந்து 07 நாட்களுக்குள் இந்த அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II இற்கு நேரில் கொண்டுவந்து கையளிக்க வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்வதற்கு தவறும் அனைத்து விண்ணப்பதாரர்களும் இந்த தேர்வுக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

(அ) இணையத்தளத்தின் ஊடாக பதிவேற்றம் (UPLOAD) செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி (7.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுறுதி செய்யப்பட்ட)

(ஆ) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.

(இ) க.பொ.த. (உ.தர) பரீட்சைப் பெறுபேறு மற்றும் Z பெறுமானத்தைக் குறிக்கும் சான்றிதழ் (பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட)

(ஈ) க.பொ.த (சா.தர) பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ் (பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட)

(உ) ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் உள்நாட்டு சாரதி அனுமதிப்பத்திரம்

(ஊ) ரூபா 1000.00 பணத்தை வங்கிக்கு செலுத்தியமைக்கான அசல் ரசீது.

(எ) வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான கிராம சேவை அலுவலரினால் வழங்கப்படும் வதிவு தொடர்பான சான்றிதழ் (DS - 04)

(ஏ) மாணவர் பணி காட்டி (பாடசாலை விடுகைப் பத்திரம் - கல்வி B 59 பொது படிவம்)

(ஒ) மேலே 5.5 துணைப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விவாகமாகாதவர் அல்லது விவாகரத்து பெற்றவர் அல்ல என்பதை உறுதிப்படுத்துவதற்கான சமாதான நீதவான் முன்னிலையில் 50.00 ரூபா முத்திரையில் கையொப்பமிடப்பட்ட உறுதிமொழி.

(ஓ) மேலே 5 வது பந்தியின் 5.1 முதல் 5.4 வரையான துணைப் பந்திகளில் விபரிக்கப்பட்டுள்ளபடி தகுதியற்ற ஒருவர் அல்ல என்பதை உறுதிப்படுத்துவதற்கான உறுதிமொழி.

8.3. குறிப்பு :

மேலே 8.2. பந்தியின் கீழ் ஆ, இ, ஈ, உ மற்றும் (ஏ) வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் தம்மால் சான்றுறுதி செய்யப்பட்ட நிழற்பிரதிகள் நேர்முகப்பரீட்சைக்கு வரும் போது கொண்டு வர வேண்டும்.

09. **ஏனைய விடயங்கள்** :

9.1 நீங்கள் யாதேனுமோர் பல்கலைக்கழத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவராக இருந்தால், அந்தப் பட்டம் செயற்பாட்டுத் திகதியானது (Effective Date) இந்த கற்கைநெறிக்கான விண்ணப்பத் திகதிக்கு அதாவது 2025.07.18 இற்கு முந்திய திகதியாக இருக்க வேண்டும்.

9.2 மேற்படி சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருந்தாலும் கட்டாயமாக நீங்கள் விண்ணப்பிக்கும் இந்த கற்கை நெறிக்கு இணைக்கப்படுவீர்கள் என இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும். குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருப்பினும் நீங்கள் போதியளவு Z பெறுமானத்தை பெறாத விடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளை பூர்த்தி செய்திரா விடின் எவ்விதத்திலும் இப்பயிற்சிக்கு தகுதியற்ற ஒருவராக கருதப்படுவீர்கள்.

9.3 மேலே 5.1, 5.2 மற்றும் 5.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனமொன்றில் முழு நேர கற்கைக்காக பதிவு செய்துள்ள மாணவர்கள்/கற்றுக்கொண்டிருப்பவர்கள் அல்லது 5.4 மற்றும் 5.5 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதியற்றவர்கள் இதற்காக விண்ணப்பித்து, பின்னர் கண்டறியப்பட்டால் உரிய கற்கையிலிருந்து/பதவியிலிருந்து நீக்கப்படுவதுடன் அதுவரை அரசாங்கத்தினால் அவருக்காக செலவிடப்பட்ட சகல கொடுப்பனவுகளும் அவரிடமிருந்து அறவிடுவதற்கும் மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு அவரின் பெயர் கறுப்புப்பட்டியலில் சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

9.4 தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய சகல அனைத்து சான்றிதழ்களின் செல்லுபடியாகும் காலம் விண்ணப்ப இறுதித்தினமான 2025.08.12 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக இருத்தல் வேண்டும்.

9.5 மேலும், இந்த கற்கை நெறிக்கு வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் இன்றி விண்ணப்பித்தால், அதனால் விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் ஏற்படக்கூடிய அசௌகரியங்களுக்கு இந்த அமைச்சு பொறுப்பல்ல.

9.6. பயிற்சிக் கல்லூரிகளில் காணப்படும் இடவசதிகள் மற்றும் சேவை அவசியத்திற்கு ஏற்ப பயிற்சிக்கு இணைக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை என்பன சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

9.7. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் அனைவரும் பயிற்சிக்கு இணைக்கப்படுவதாக இங்கு எந்த பந்தியிலும் குறிப்பிப்படவில்லை என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

9.8. நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தொடர்பான விபரங்கள் http://www.health.gov.lk எனும் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன், எவருக்கும் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்பட மாட்டாது. எவ்வாறாயினும், அவ்வப்போது எழும் குறிப்பிட்ட தகவல்களைப் பற்றி தெரிவிக்க நேரிட்டால், நீங்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம் மற்றும் /அல்லது மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அறிவிக்கப்படும். எனவே, விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியை மாற்றாமல், செயலில் வைத்திருப்பது உங்களின் பொறுப்பாகும். மேலும் மாற்றங்கள் அல்லது செயலற்று இருப்பதால் உரிய தகவல்கள் சரியான நேரத்தில் தெரிவிக்க முடியாமையினால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளுக்கு இந்த அமைச்சு பொறுப்பல்ல.

9.9. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுள் உரிய காலத்தில் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்காதவர்கள் அல்லது நேர்முகப் பரீட்சைக்கு உரிய தினத்தில் சமூகமளித்து உரிய தினத்தில் பதிவு செய்யாத விண்ணப்பதாரிகளினால் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு கற்கை நெறியில் இணைவதற்காக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

10. பயிற்சித் திட்டம் :

10.1. நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் இந்த கற்கை நெறியை தொடர்வதற்கு பயிற்சி கல்லூரிக்கு உள்வாங்கப்படுவார்கள். கற்கை நெறிக்கான காலம் மற்றும் கற்க வேண்டிய மொழி என்பன இலக்கம் I அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

10.2. பயிற்சிக்காக இணைக்கப்படும் பயிலுனர்கள் பயிற்சிக் கல்லூரியில் வலுவில் உள்ள விதிமுறைகளுக்கும் மற்றும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

10.3. பயிற்சிக்காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது பரீட்சை மற்றும் லீவு நிபந்தனைகளை மீறும் அல்லது பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகளில் ஏதாவது உண்மைக்கு புறம்பானவை அல்லது பிழையானவையென தெரியவருமிடத்து பயிற்சியின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

10.4. பயிற்சிக் காலத்தில் மாணவர்களுக்கு அரச நிருவாக சுற்றறிக்கை 10/2025 இன் உப ஆவணம் VI இன் நியதிகளுக்கு அமைய மாதாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

10.5. பயிற்சிக் கல்லூரிக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும் போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்தபட்சம் பத்து வருடங்கள் (10) மத்திய / மாகாண அரச சேவையின் கீழ் உரிய பதவியில் சேவையாற்றுவதாகவும், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரினால் பரிந்துரைக்கப்படும் அதிகாரியுடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வர வேண்டும் என்பதுடன், உங்கள் பயிற்சி மற்றும் கட்டாய சேவைக் காலம் தொடர்பாக சுகாதார அமைச்சினால் சமர்ப்பிக்கப்படும் பிணைக்கு இரண்டு பிணையாளிகளுடன் உடன்பட வேண்டும். மேலே 10.3 இன் படி, பயிற்சியின் போது பயிற்சியிலிருந்து விலகினால், பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று பத்து (10) வருட காலம் மேற்படி உரிய பதவியில் சேவையாற்றுவதற்கு தவறினால் அவ்வாறான மாணவர்கள் பயிற்சியிலிருந்து/பதவியிலிருந்து நீக்கப்பட்டு இந்த காலத்தினுள் அவருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகள் மற்றும் பிணைத் தொகை என்பவற்றை அவர் சுகாதார அமைச்சிற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறினால் அப்பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

10.6. இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்ப திகதியில் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் அத்துடன் விவாகரத்து செய்த நபர்களாகவும் இருத்தலாகாது என்பதுடன், பயிற்சிக் காலத்திலும் திருமணம் புரியாமல் இருத்தல் கட்டாயமானதாகும்.

11. **சேவையில் ஈடுபடும் நியதிகள்** :

11.1. பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டிருக்காது. எனினும், பயிற்சியை நிறைவு செய்யும் தினமாகும் போது நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய தயாரிக்கப்படும் முன்னுரிமை வெற்றிட பட்டியலுக்கு அமைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கிய பின்னர் எஞ்சிய வெற்றிடங்களுக்கு பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்து இறுதிப்பரீட்சையில் சித்தியடையும் பயிலுனர்களின் பயிற்சி நெறியின் இறுதிப்பரீட்சை திறமையை கருத்திற்கொண்டு உரிய பதவியின் III ஆம் தரத்தின் பதவிக்கு நியமிப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும். அத்துடன் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு கட்டுப்படல் வேண்டும்.

11.2. நியமனம் பெற்றவர்களுக்கு அரச நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் விதிமுறைகளுக்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

11.3. விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளிட வேண்டும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போது அல்லது நியமனம் பெற்ற பின்னர் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என கண்டறியப்பட்டால், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கருப்பு பட்டியலில் அவருடைய பெயர் உள்வாங்கப்படும். மேலும், பயிற்சிக் காலத்தில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செலவினங்கள் மற்றும் ஒப்பந்த பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11.4. பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியம்; கொண்டவராக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு பயிற்சியின் முதல் மாதத்திற்குள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவர் என காணப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர தகுதியற்றவராக கருதப்படுவார்கள்.

11.5. மேற்படி இணைக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் சட்ட திட்டங்களுக்கும், அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அரச சேவைகள் தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும், சேவைப் பிரமாணக்குறிப்பின் விதிமுறைகளுக்கும், அரச நிதி ஒழுங்கு விதிகளுக்கும், அரச சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கும் மற்றும் அவை தொடர்பாக காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் திருத்தங்களுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

11.6. பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சி கல்லூரிகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இந்த அமைச்சு கட்டுப்பட்டில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தங்குமிட அறைக்கான வாடகை, நீர் மற்றும் மின்சார கட்டணம் அறவிடப்படும்.

11.7. இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுவதற்கான எவ்வித உரிமைகளும் இல்லை.

11.8. பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால், அது தொடர்பாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

டாக்டர் அனில் ஜாசிங்க,
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு.

'சுவசிறிபாய'
இல. 385, சங்கைக்குரிய பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு – 10.
2025. 07. 04.

07-690

## இலங்கை உயர் கல்வி தொழில்நுட்ப நிறுவனம் (SLIATE)

2025 ஆம் ஆண்டுக்கான மாணவர் ஆட்சேர்ப்பு

இது இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தில் (SLIATE) 2025 கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை தொடர்பாக 2025, யூன் 13 ஆந் திகதி அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பைக் குறிக்கிறது. உயர் தேசிய டிப்ளோமா திட்டங்களுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி திகதி 2025, யூலை 28 வரை நீடிக்கப்பட்டுள்ளது. மேலும் விபரங்களுக்கு, அதிகாரப்பூர்வ வலைத்தளங்களைப் பார்வையிடவும்: www.sliate.ac.lk அல்லது apply.sliate.ac.lk.

07-726

---

## இலங்கை - ஜேர்மன் தொழிநுட்ப பயிற்சி நிறுவகம்
## மொரட்டுவை

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

தொழிற் கல்வி பிரிவு

**தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழு நேர பயிற்சி நெறிக்கான அனுமதி - 2025**

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் கீழ்காணும் ஆகக்குறைந்த தகைமைகளையுடய ஆண்/பெண் இரு பாலாரிடமிருந்து 2025 ஆம் ஆண்டு அனுமதிக்கான பயிலுணர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தேவையான ஆகக்குறைந்த தகைமைகள் :**

01. (அ) **வயது :**

1.1. 2025.08.18 ஆம் திகதியன்று 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்

(ஆ) **கல்வி :**
க. பொ. த சாதாரண தர பரீட்சையில் தமிழ் அல்லது சிங்களம் (போதனா மொழி), கணிதம் உட்பட 06 பாடங்களில் ஓர் அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் .

**விசேட திறமை :**
மின்னியல் / இலத்திரனியல் / இயந்திரவியல் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு தேசிய / மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினை பெற்ற சான்றிதலுடன் (ஆ) கல்வி தகைமையினை இரண்டுக்கு மேற்பாடாத அமர்வுகளில் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) தேசிய தொழில் பயிலுணர் தொழிற்பயிற்சி அதிகார சபையில் 03 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கான பயிற்சியினை பெறுவோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் அல்லர்

02. **பயிற்சி போதனை மொழி மூலம் :**

எல்லா பாடநெறிகளும் சிங்களத்தில் நடாத்தப்படுவதோடு , மோட்டார் இயந்திரவியல் மாத்திரம் தமிழில் நடத்தப்படும்.

03. **நுழைவுத்தேர்வு :**

மேல்குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய, கீழே 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை கட்டணங்கள் செலுத்திய விண்ணப்பதாரி மட்டும் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(அ) பரீட்சைக்கான மொழி : தமிழ் / சிங்களம்

(ஆ) பரீட்சை நிலையம் : அனுமதிக்கான எழுத்து மூல பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, பதுளை,அனுராதபுரம், கிளிநொச்சி ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும். (போதிய அளவு பரீட்சார்த்திகள் இல்லாத நிலையங்களில் பரீட்சை இரத்து செய்யப்பட்டு அவர் விருப்பும் வேறு பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர் )

**எழுத்து மூல பரீட்சை :**

கணிதம், அடிப்படை தொழிநுட்ப அறிவு, தொழிநுட்ப வரைபு , நுண்ணறிவு , பொது அறிவு , ஆங்கிலம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்ட 02 வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

04. **பரீட்சை கட்டணம் :**

விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையின்படி 1000 ரூபாய் செலுத்தப்பட வேண்டும் . இதை தவிர வேறு எந்த முறை கொடுப்பனவும் ஏற்று கொள்ளபடமாட்டாது. அனுமதி பரீட்சைக்கு தோற்றாத காரணத்தினாலோ அல்லது வேறு எந்த காரணத்தினாலோ பரீட்சை கட்டணம் மீளளிக்கபடமாட்டாது என்பதை விஷேட கவனத்தில் கொள்க.

05. **ஆரம்ப தேர்வு முறை :**

எழுத்து மூல பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளை பெறுபவர்கள் மத்தியிலிருந்து திறமை அடிப்படையில் தகைமை உடையவர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின் தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப்பட்டுள்ளது. (இவ் வெட்டுப்புள்ளி இலங்கை பரீட்சை திணைக்களத்தின் நடைமுறைக்கேட்ப தீர்மானிக்கப்படும்.)

06. **இறுதி தேர்வு முறை :**

நேர்முக பரீட்சைக்கு முன்பாக செயல்முறை பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். செயல்முறை பரீட்சையின் 40% உம், நேர்முக பரீட்சையின் 60% உம் , புள்ளிகளாக வழங்கப்படும் . விளையாட்டு போன்ற சிறப்பு தகைமைகள் இருந்தால் அவைகள் கவனத்தில் கொள்ளப்படும். பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டோர் வைத்திய பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். இதில் சித்தி அடையாதோர் பயிற்சியில் இருந்து நீக்கப்படுவர்.

07. **பயிற்சி நெறி :**

| இல. | பயிற்சி நெறி | பயிற்சி காலம் (ஆண்டுகள்) |
|---|---|---|
| 01 | மோட்டார் இயந்திரவியல் தொழிநுட்பவியலாளர்<br>Automobile Technician | 04 |
| 02 | மில்ரயிட் / வார்ப்பியலாளர் தொழிநுட்பவியலாளர்<br>Millwright Technician | 04 |
| 03 | காற்று பதனமாக்கல் / குளிரூட்டல் தொழிநுட்பவியலாளர்<br>Refrigeration & Air Conditioning Technician | 03½ |
| 04 | வலு மின்னியல் தொழிநுட்பவியலாளர் ( தொழில்துறை )<br>Power Electrical Technician ( Industrial) | 03½ |
| 05 | கடைசல் இயந்திர தொழிநுட்பவியலாளர் (பொது )<br>Machinist (General) | 03½ |
| 06 | எந்திர மின்னணுவியல் தொழிநுட்பவியலாளர்<br>Industrial Mechatronic Technician | 03½ |
| 07 | டீசல் பொறிமுறையாளர்<br>Diesel Mechanic | 03 |
| 08 | வாகன மின்னியல் வல்லுநர்<br>Automobile Electrician | 03 |
| 09 | உருக்கி இணைத்தல்<br>Welder | 03 |
| 10 | வாகன உடல் திருத்துதலும் வர்ணம் தீட்டுதலும் Motor<br>Vehicle Body Repairer & Painter | 03 |

விண்ணப்ப படிவத்தில் தங்களுக்கு விருப்பமான பாட நெறிகளை விருப்பத்தின் அடிப்படையில் பட்டியல்படுத்தவும்.

08. **பிணை முறி கைச்சாத்திடல் :**

04, 3 ½, 3, வருட பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவோர் எமது நிறுவனம் மற்றும் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையுடன், பயிற்சியினை திருப்திகரமாக பூர்த்தி செய்வேன் என உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட வேண்டும்.

09. **விண்ணப்பத்திற்கான அறிவுரைகள் :**

எல்லா விண்ணப்பதாரிகளும் நிகழ்நிலையில் (online system ) விண்ணப்பிக்க வேண்டும் . இணையதள நிகழ்நிலையில் (online system ) விண்ணப்பம் நிரப்பும் போது முழுவதும் ஆங்கில மொழியில் நிரப்ப வேண்டும் . கீழே உள்ள முகவரி மூலம் இணையதள நிகழ்நிலையை (online system ) செயற்படுத்த முடியும்.

https://fta.germantec.lk

தொழிநுட்ப விசாரணை : 0701 640 650 ( வார நாட்கள் , மு.ப 8.00- பி.ப 5.00 )

நிகழ்நிலையில் (online system) விண்ணப்பம் நிரப்ப முன்னர் இணையத்தளத்தில் உள்ள அறிவுரைகளை பின்பற்றவும்.

எல்லா விண்ணப்பதாரர்களுக்கும் நிகழ்நிலையில் விண்ணப்பம் நிரப்பிய பின்னர் அதன் பிரதியை அச்சு எடுக்கும் வசதி வழங்கப்பட்டுள்ளது . அவ்வாறு பெற்றுக்கொள்ளும் கடின நகல் (Hard copy.pdf) உடன் கீழே தரப்பட்டுள்ள சான்றிதழ்களை பிரதி எடுத்து இணைத்து கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பவும்.

1. பிறப்பு அத்தாட்சி பத்திரம்
2. க.பொ.த. சாதாரண தர பரீட்சை சான்றுதல்
3. இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள்

தபால் உறையின் இடப்பக்க மூலையில் "முழுநேர பயிற்சிநெறிக்கு பயிலுனர்களை சேர்த்தல் 2025" எனக்குறிப்பிடுதல் வேண்டும் .

மேலே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனத்தில் கொள்ளாமல் விண்ணப்பதாரிக்கு ஏற்படும் அசவுகரியங்களுக்கு நிறுவனம் எந்த பொறுப்பும் ஏற்றுக்கொள்ள மாட்டாது .

வழங்கப்படும் தரவுகள் பொய்யானது என தெரியவந்தால் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர் என்றும் பின்னர் எந்த பரீட்சையிலும் தோற்ற முடியாமல் போகும்.

மேலதிக விபரங்களுக்கு www.germantec.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்.

10. **விண்ணப்ப முடிவு திகதி** : 2025.08.18

(09) இல் குறிப்பிட்டவாறு நிகழ்நிலை (online) மூலம் விண்ணப்பித்த பின்னர் அதில் பெறப்பட்ட கடின நகலின் பிரதியை (Hardcpy.pdf) 2025.08.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு , கீழே உள்ள முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பவும்.

11. **பரீட்சை அனுமதி பத்திரம் :**

தகைமையுள்ள பரீட்சாத்திகளுக்கு 2025.09.04 திகதியளவில் பரீட்சை அனுமதி பத்திரம் அனுப்பி வைக்கப்படும். மேற்படி பத்திரம் கிடைக்கப்பெறாதோர் இத்தினத்தில் இருந்து 3 நாட்களுக்குள் கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்க.

முகவரி : முகாமையாளர் - மனித வளமும் நிர்வாகமும்
இலங்கை ஜேர்மன் தொழிநுட்ப பயிற்சி நிறுவகம்,
இல. 528 , காலி வீதி , கல்கிசை , (அங்குலானை சந்திக்கு அருகில்)
தொலைபேசி : 0112605625 / 0112605535

07-732

## சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

### தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறி பயிற்சிக்காக விஞ்ஞானமானி தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2025

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய பல்கலைக்கழகம் அல்லது நிறுவனத்தின் ஊடாக விஞ்ஞானமானி தாதியர் பட்டம் பெற்ற கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்களினது பட்டம் வலுப்பெற்ற தினம் மற்றும் GPA பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலின்படி நிலவுகின்ற வெற்றிடங்களின் பிரகாரம் ஆண்டுதோறும் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படும் எண்ணிக்கையில் 25% விஞ்ஞானமானி தாதியர் பட்டதாரிகளின் அடிப்படையில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களில் இருந்து தெரிவு செய்யப்படுவர். இதற்கமைவாக தாதி வழிகாட்டல் மற்றும் பயிற்சிப் பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களிடையே 875 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்

2. **பதவிக்கான கல்வித்தகைமைகள்** :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் விஞ்ஞானமானி (தாதி) பட்டம் {B.sc. (Nursing) Degree} பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. **உடற்தகைமை மற்றும் ஏனைய தகைமைகள்:**

(அ) இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு எல்லாவிதத்திலும் உடல் ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

(உ) 2025.08.08ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஊ) உரிய பட்டம் வலுப்பெற்ற தினம் 2025.06.30ஆந் திகதிக்கு முன்னராக இருத்தல் வேண்டும்.

(எ) நேர்முகப் பரீட்சை நடைபெறும் தினத்தன்று இலங்கை தாதியர் சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

4. **விண்ணப்பிக்கும் முறை:**

(அ) இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டும். அதற்காக A4 அளவுத் தாளினை பயன்படுத்தல் வேண்டும். விண்ணப்பத்தில் இலக்கம் 01 தொடக்கம் 14 வரை முதல் பக்கத்திலும் 15 தொடக்கம் 17 வரை இரண்டாம் பக்கத்திலும் இலக்கம் 18 மூன்றாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரித்தல் வேண்டும்.

(ஆ) பட்டச் சான்றிதழ் மற்றும் GPA பெறுமதியைக் காட்டுகின்ற சான்றிதழை சுயமாகவே உண்மையென உறுதிப்படுத்திய பிரதியொன்றை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர்கள் ரூபா 1000.00 பெறுமதிக்கு இலங்கை வங்கி, தப்ரோபிறேன் கிளையின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 7041318 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைக்கட்டணம் அறவிடல் எனும் கணக்கிற்கு வரவு வைத்து பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டினுள் ஒட்டவேண்டும். அக்கட்டணம் எக்காரணம் கொண்டும் மீண்டும் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் பிற பரீட்சைகளுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்படமாட்டாது.

(ஈ) அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பப் படிவத்தை நிறுவனத் தலைவர் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும். ஏனைய விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பப் படிவத்தில் ஒப்பமிட்டு, தங்கள் பிரிவின் கிராம அலுவலர் / அரசாங்க பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான் / சத்தியப் பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி / முப்படையின் ஆணை பெற்ற அலுவலர் / பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தலைமைப் பிக்கு / பிற மத வழிபாட்டுத் தலத்தைச் சார்ந்த பொறுப்பான அந்தஸ்து வாய்ந்த மதத் தலைவர் / அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையைச் சேர்ந்த நிரந்தர பதவிநிலை அலுவலர் ஆகியோரில் ஒருவர் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.

(உ) முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பத்தை கடித உறையில் இட்டு அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறி பயிற்சிக்காக விஞ்ஞானமானி தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் 2025” எனவும் உரிய பட்டம் மற்றும் கல்வி ஆண்டு என்பவற்றையும் குறிப்பிட்டு பணிப்பாளர் (நிர்வாகம்) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, சுவசிறிபாய இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை கொழும்பு -10 எனும் முகவரிக்கு 2025.08.08 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

05. அரசாங்க அல்லது பகுதியளவு அரசாங்க சார்பு நிறுவனங்களில் சேவையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும். அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு என்பதுடன் உரிய பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்தாலும் அல்லது செய்யாது விட்டாலும் எக்காரணத்தைக் கொண்டும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் செல்ல முடியாது என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும்

6. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அமையாத பூரணப்படுத்தப்படாத மாதிரி விண்ணப்படிவத்திற்கு ஏற்புடையதாக அமையாத, அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத, வங்கி பற்றுச்சீட்டு ஒட்டப்படாத மற்றும் 2025.08.08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை தொடர்பிலும் அறிவிக்கப்பட மாட்டாது.

7. மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுள் அவர்களின் பட்டம் வலுப் பெற்ற தினம் மற்றும் GPA பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட முன்னுரிமைப்பட்டியலின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டவர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப்பரீட்சை சபையொன்றினால் பொதுவான நேர்முகப்பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன் நேர்முகப்பரீட்சை சபையினால் தாதியர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகள் பரிசீலித்தல் மற்றும் உடற்தகைமை பரிசீலிக்கப்படும்.

குறிப்பு :

(அ) சேவையின் தேவைப்பாட்டுக்கு அமைவாக பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளும் எண்ணிக்கை மற்றும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை என்பன சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(ஆ) நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்கும் சகலரையும் பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதாக இச் சுற்றறிக்கையில் எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்திற்கொள்ளவும்.

(இ) நேர்முகப்பரீட்சையின் பின்னர் தகைமையுடையோர், தகைமை பெறாதோர் மற்றும் தெரிவு செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரங்கள் www.health.gov.lk எனும் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் மாத்திரம் வெளியிடப்படும் என்பதுடன் எவருக்கும் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்பட மாட்டாது.

8. நேர்முகப்பரீட்சையின் போது விண்ணப்பதாரிகளால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புச்சான்றிதழ்;

(ஆ) பட்டத்தின் மூலப்பிரதியுடன் GPA பெறுமதியைக் காட்டும் விரிவான பெறுபேற்றுச் சான்றிதழ் மற்றும் சுயமாகவே குறித்த ஆவணம் உண்மையென உறுதிப்படுத்திய சான்றிதழின் பிரதி;

(இ) தேசிய ஆளடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் ;

(ஈ) இலங்கை தாதியர் சபையில் பதிவு செய்தமை பற்றிய ஆவணம்.

9. **பயிற்சியளிக்கும் நடைமுறை -**

| *பாடநெறி* | *பாடநெறியின் காலப்பகுதி* | *மொழிமூலம்* |
|---|---|---|
| தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு | 06 மாதங்கள் | ஆங்கிலம் |

(அ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்கு அந்தந்த பயிற்சி பாடசாலைகளுக்கு இணைக்கப்படுவர். கற்கைநெறிகள் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படும்.

(ஆ) பயிற்சிப் பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படுகின்ற பயிலுனர்கள் பயிற்சிப்பாடசாலைகளில் வலுவில் இருக்கும் விதிமுறைகளுக்கும் சுகாதார அமைச்சினால் அவ்வப்போது பிறப்பிக்கும் பிற கட்டளைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(இ) பயிற்சிக்காலத்தின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலை மற்றும் நடத்தை திருப்திகரமாக இல்லாத விடத்து அல்லது தான் உள்வாங்கப்படும் பயிற்சி பாடசாலைகளில் வலுவில் இருக்கும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட தவறும் பயிலுனர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எவ்வித நட்டஈடுகளும் வழங்காது பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

(ஈ) பயிற்சிக் காலத்தில் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 10/2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைய மாணவ தாதியர்களுக்கு மூன்றாம் வருடத்தில் வழங்கப்படுகின்ற மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

(உ) தாதியர் பயிற்சிப்பாடசாலைக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும் போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும் அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும் குறித்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்த பட்சம் ஐந்து வருடங்கள் (05) உரிய மாகாணத்திற்கு அல்லது நேரொத்த அமைச்சுக்குரிய நியமிக்கப்பட்ட மருத்துவமனையில் அல்லது சுகாதார சேவைகள் திணைக்களத்தில் சேவையாற்றுவதாகவும் சுகாதார செயலாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருடன் உடன்படிக்கைக்கும், பிணைமுறிக்கும் உடன்படல் வேண்டும். குறித்த உடன்படிக்கை மற்றும் பிணைமுறி பயிற்சிக்காக பதிவு செய்யும் தினத்தன்றே கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி கிளையிடம் ஒப்படைக்க வேண்டும். பயிற்சி காலத்தின் போது பயிற்சியிலிருந்து விலகினால் அல்லது பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால் மேற்படி (இ) பந்தியின் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று ஐந்து(05) வருடங்கள் உரிய மாகாண சபையின் அல்லது நேரொத்த அமைச்சின் நியமிக்கப்பட்ட மருத்துவமனைகள் அல்லது சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் உரிய பதவியில் சேவையாற்ற தவறினால் அல்லது பயிற்சிக்காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் அரசினால் பயிற்சிக்காக செலவிடப்பட்ட செலவுகள், மற்றும் பிணைமுறிக்குரிய தொகையை அவரினால் சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தத்தவறின் குறித்த தொகையை அறவிடுவதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **சேவையில் ஈடுபடும் நியதிகள்:**

அச்சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கேற்ப பயிற்சியின் இறுதியில் குறித்த பதவியில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு / வழங்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்படும். அதன் பிரகாரம் உரிய பதவியின் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு தீர்மானித்;தால் பயிலுனர்கள் தாம் பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட கற்கை நெறிக்கு உரித்தான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நிபந்தனைகள் மற்றும் வெற்றிடங்களுக்கு ஏற்ப 2025.03.25 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் MT-7-2025 சம்பள வகுதிக்குரிய சம்பள அளவுத்திட்டத்தின் (54,920- 10×800- 11×1,190- 10×1,320- 10×1,350- 102,710)உப அட்டவணை iii இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 4 ஆவது படிநிலையில் வைத்து சம்பளம் வழங்குவதன் அடிப்படையில் iii ஆம் தரத்தின் தாதி உத்தியோகத்தர் பதவிக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11. விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்குதல் வேண்டும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என உறுதிப்படுத்தப்பட்டால் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்பட்டு பதவியிலிருந்து நீக்கப்படுவர் அல்லது பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர். மேலும் அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன் மீண்டும் அரசாங்க சேவையில் இணைய முடியாதவாறு கறைநிரலில் அவருடைய பெயர் சேர்க்கப்படுவதுடன் பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் அரசினால் செலவிட்ட செவினங்கள் மற்றும் பிணைமுறிக்குரிய தொகை அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய கற்கை நெறியை தொடர்வதற்கும் மற்றும் நாட்டின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் உடல் மற்றும் உள ரீதியாக பொருத்தமானவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு பயிற்சியின் முதலாம் மாதத்தினுள் மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் மருத்துவ பரிசோதனையில் பொருத்தமற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் விண்ணப்பதாரி பயிற்சியில் ஈடுபடுவதற்கு தகுதியற்றவர் என கருதப்படுவார்.

13. இப் பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அல்லது தனியார் சேவையில்; ஈடுபடுவதற்கு எந்தவித உரிமையும் இல்லை. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தெரியவரும் பட்சத்தில் பயிற்சியில் இருந்து நீக்கப்படுவர் அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

14. மேற்படி இணைத்துக்கொள்ளப்படும் சகலரும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உரித்தாகும் சகல விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை ஏற்பாடுகளுக்கும், சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் விதிக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைத்திட்ட விதிகளுக்கும், நிதி ஒழுங்குவிதிகளுக்கும், தாதியர் சேவை பிரமானக்குறிப்புக்கும், அதில் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கும் மற்றும் காலத்திற்குக்காலம் வலுவில் இருக்கும் பொது ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

15. பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்படுபவர்களுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இவ் அமைச்சு கட்டுப்படவில்லை.அவ்வாறு வழங்குவதாயின் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வீடு மற்றும் அறை வாடகை, தண்ணீர் மற்றும் மின்சார கட்டணங்கள் அறவிடப்படும்.

16. பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளல் தொடர்பான இந்த பொதுச் சுற்றறிக்கை மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும். இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும்.

மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க,
செயலாளர்,
சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
2025, யூலை 18.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறி பயிற்சிக்காக விஞ்ஞானமானி தாதி பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளல் - 2025**

விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| 01. | முதலெழுத்துக்களுடன் இறுதியில் வரும் பெயர் (ஆங்கிலம் கெப்பிட்டல் எழுத்தில்) | |

| | | |
|---|---|---|
| 02. | முழுப் பெயர் (ஆங்கிலம் கெப்பிடல் எழுத்தில்) | |

| | | |
|---|---|---|
| 03. | முழுப் பெயர் சிங்களத்தில் /தமிழில் | |

| | | |
|---|---|---|
| 04. | தேசிய அடையாள அட்டை இலக்கம் | |

| | | |
|---|---|---|
| 05. | கைத்தொலைபேசி இலக்கம் (WhatsApp உடன்) | |

| | | |
|---|---|---|
| 06. | அஞ்சல் முகவரி | |

| | | |
|---|---|---|
| 07. | நிரந்தர முகவரி | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 08. | வசிக்கும் மாவட்டம் | | 09. | நீங்கள் இந்த மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவரா? | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10. | பிறந்த திகதி | ஆண்டு | | மாதம் | | நாள் | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11. | 2025.08.08 ஆந் திகதிக்கு வயது | ஆண்டு: | | மாதம்: | | நாள்: | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12. | பெண்ணா/ஆணா (☑ என குறியீட்டை இடவும்) | பெண் | | ஆண் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | நீங்கள் இலங்கை பிரசையா (☑ என குறியீட்டை இடவும்) | ஆம் | | இல்லை | |

14. கல்வித் தகைமைகள் :

| *சித்தியடைந்த பட்டம்* | *பட்டம் செல்லுபடியாகும் திகதி* | *தரத்தின் பொதுவான பெறுமதி(GPA)* | *பல்கலைக்கழகம்* | *கல்வியாண்டு* |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

15.

| | | | | |
|---|---|---|---|---|
| நீங்கள் எப்போதாவது ஏதாவதொரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா? (☑ என உரிய இடத்தில் குறியீட்டை இடவும்) | ஆம் | | இல்லை | |
| பதில் ஆம் எனின் அது பற்றிய விபரங்கள் | | | | |

16. விண்ணப்பதாரரின் உறுதியுரை

என்னால் விண்ணப்பங்கள் கோரப்பட்ட அறிவித்தலை நன்கு வாசித்து புரிந்துகொண்டு, அதில் குறிப்பிடப்பட்ட அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்பட்டு இந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்துள்ளேன் என்றும், நான் வேறு எந்த முழுநேரப் பாடநெறியிலும் பங்கேற்கவில்லை என்றும், இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கியுள்ள தகவல்கள் எனக்குத் தெரிந்த வரையில் உண்மையெனவும் சரியானவையெனவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்னால் தெரிவிக்கப்பட்டுள்ள இந்தக் கூற்று அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட எந்தத் தகவலும் பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால், பயிற்சிக்கு தகுதியற்றவனாக ஆகிவிடுவேன் என்றும், நியமிக்கப்பட்ட பின்னர் அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

அதேபோல் இந்த ஆட்சேர்ப்பு வெளிவாரி ஆட்சேர்ப்பு எனவும், எனக்கு சம்பந்தப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்ய முடிந்தாலும் முடியாவிட்டாலும் எந்த விதத்திலும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் வர முடியாது என நன்றாக புரிந்து கொண்டுள்ளேன் எனவும் தெரிவிக்கின்றேன்.

| |
|---|
| ரூபா 1,000.00 செலுத்திப் பெற்றுக் கொண்ட வங்கிப் பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். |

………………………………. ……………………………………………….
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

17. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி …....................................................................... ......................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் ................................. ஆந் திகதி .. .............................. இல் எனக்கு முன்பாக அவரின் ஒப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ............................

...............................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் மற்றும்
உத்தியோகபூர்வ முத்திரை

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் பெயர் : .....................................................
பதவி : ....................................................
முகவரி : ....................................................

18. விண்ணப்பிக்கும் அபேட்சகர் அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் ஈடுபடும் ஒருவராக இருந்தால் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (பொருந்தாத சொற்களை வெட்டி விடவும்)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரரான திரு. / திருமதி/ செல்வி.................................... …………………இந்தத் திணைக்களத்தில் ............................................பதவியை வகிக்கின்றார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையான தகவல்கள் என உறுதிப்படுத்துவதுடன், பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் / முடியாது எனத் தெரிவிக்கிறேன்.

மேலும் இந்த ஆட்சேர்ப்பு வெளிவாரியான ஆட்சேர்ப்பு எனவும் அவர் உரிய பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தாலும் அல்லது செய்யாவிட்டாலும் எந்த விதத்திலும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் வர முடியாது எனவும் அவருக்கு புரிய வைத்துள்ளேன் எனவும் தெரிவிக்கிறேன்.

திகதி : ...........................

.........................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

திணைக்களத் தலைவரின் பெயர் : ...................................................

பதவி : ....................................................

முகவரி : ....................................................

07-766

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.